International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 02 April to June 2022 www.irjtsjournal.org

# சங்க இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல்

கு. சகாயராணி,

முனைவர் பட்ட ஆய்வாளர்,

சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி,

திருப்பூர் -2

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியல் நிகழ்வுகளையும் , பண்பாட்டுக் கூறுகளையும் வெளிப்படுத்துகின்றன. சங்கத் தமிழர்களின் வாழ்வியலின் காலக் கண்ணாடியாக விளங்கும் சங்க இலக்கியங்களில் இடம் பெறும் வாழ்வியல் செய்திகளை எடுத்துக்கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முன்னுரை**

பண்டைத் தமிழர்களின் அக , புற வாழ்க்கையைப் பற்றிய செய்திகளை சங்க இலக்கியங்கள் வழி அறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும் . அறத்தினால் பொருளும் , பொருளால் இன்பமும் , இன்பத்தால் வீடும் பெற எண்ணுவதே மக்களின் எண்ணம். தமிழர் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் அடையும் குறிக்கோளில் வாழ்ந்து வந்தனர் . மக்கள் மனம் குறைவின்றி நிறைந்த இன்பக்கடலில் திளைத்திருக்க வாழும் வாழ்க்கை அகம் எனப்படுகிறது . புறமாவது அவ்வுள்ளம் அந்த கடலில் படிந்து இருத்தற்கு உறுதுணையான பொருளினை அறவழியில் பெற மேற்கொள்ளும் முயற்சியாகும்.

**வாழ்வியல் - பொருள்**

**'வாழ்வியல் என்பது மனிதன் வாழ்க்கையை சிறப்பான முறையில்**
**அமைத்துக் கொள்ளுதல் ஆகும்" (கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ப. 1243)**

தங்களுடைய இல்லற வாழ்வியலில் சோம்பலாக இருப்பவர்களுக்கு புகழ் , இன்பம், அறம் ஆகியன இம்மூன்றும் அரிதாகக் கூட கிடைப்பது இல்லை என்பதை,

"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
**அசையுநர் இருந்தோர்க்கு அரும் புணர்வு**
**ஈண்டு என**
**வினைவயின் பிரிந்த வேறுபாடு கொள்ள"( நற். பா.எண்.214)**

என்ற நற்றிணைப் பாடலடிகள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**வாழ்வியல் நெறிமுறைகள்**

தமிழர்களின் வாழ்வியல் நெறிமுறைகள் உலக மக்களுக்கே வழிகாட்டக்கூடியன .களவு நெறி , கற்பு நெறி என்ற பாகுபாட்டுடன் சங்க அகமாந்தர்கள் இல்லற வாழ்வினை மேற்கொண்டனர்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2022, IRJTSR

சங்க இலக்கியத்தில் போர் , வீரம், வெற்றி, கொடை ஆகியன புறச்செய்திகளாகக் கூறப்படுகின்றன. தமிழர்களின் புற வாழ்க்கையில் அரசியல் நிலை, சமுதாய நிலை, பழக்கவழக்கங்கள், நாகரிகம், கல்வி, பொருளாதாரம், கலை வளர்ச்சி ஆகியவை நிகழ்ந்துள்ளன.

**நல்லது செய்தல் ஆற்றிராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் ( புறம். 195)**

**பெரியோரை வியத்தலும் மிளமே**
**சிறியோரை இகழ்தல் அதனினுமிலமே ( புறம். 192)**

**நிலம் பெயரினு; நின்சொல் பெயரல்**
**வாழ்தல் வேண்டிப் பொய்துரேன், மெய் உறுவர் (புறம். 131)**

போன்ற புறப்பாடல்கள் வாழ்வியல் உண்மைகளை எடுத்துரைக்கின்றன.

**சங்க இலக்கிய மக்கள்**

மனித குலத்திற்கு வேண்டிய அரும் பண்பினை சங்க இலக்கியங்கள் அழகுபட எடுத்துக்காட்டுகின்றன. நிலத்தின் நீர் , நில வளங்களுக்கேற்ப அந்நிலத்து வாழும் மக்கட் பண்பும் , செயலும் மாறுபடுவதை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம்.

**'நாடா கொன்றோ காடா கொன்றோ**
**ஆவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை: வாழிய நிலனே ( புறம். 181)**

என்ற புறப்பாடல் நாட்டு மக்கள் நல்லவராக இருந்தால் மண்ணும் மதிப்பும் பெறும் என்ப ித் காட்டுகின்றது.

**சங்க இலக்கிய மன்னர்கள்**

புலவருக்கும் மன்னனுக்கும் இடையிலான உறவுக்கு பொருநராற்றுப்படை பாடலடிகள் சிறந்த சான்றாக அமைகின்றது.

**'கேளிர் போல கேள் கொளல் வேண்டி**
**வேளாண் வாயில் வேடப் கூறின்**
**கண்ணில் கான நண்ணுவ (பொருநராற்றுப்படை பா.அடி 74-77)**

தன்னை நாடி வந்த புலவரைப் புதிதாக் கண்ணூற்றவராய் எண்ணாது . தன்னுடன் நீண்ட நெடுங்காலமாக பழகிய நண்பரிடம் அன்பு காட்டுவது போல மன்னன் அன்பு காட்டினான் என்பதை பொருநராற்றுப்படை பாடல் வழி அறியமுடிகிறது.

**சங்கப் புலவர்கள்**

அரசர்களின் பெருமை , சிறப்பு, புகழ், வீரம், கொடை, பண்பு போன்றவற்றைப் புலவர்கள் புகழ்ந்து பாடி அரசன் கொடுத்த பொருளைக் கொண்டு வந்து தம் வாழ்க்கையை நடத்தினர் என்பதை புறநூல்கள் மற்றும் ஆற்றுப்படை நூல்கள் மூலம் அறியமுடிகிறது.

**இறைவழிபாடு**

மனித மனத்தில் தோன்றிய அச்சம் , குற்றவுணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாட்டு நெறிக்கு வித்திட்டது . இதன்படி, தொடக்கக் காலத்தில் பண்டைத் தமிழர்கள் ஞாயிறு, திங்கள், ஆறு, கடல், மலை, நெருப்பு முதலிய இயற்கையைப் பொருள்களைத் தெய்வங்களாக வழிபட்டனர்.

**ஞாயிறு வழிபாடு**

சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டனர் அவர்களைவிட ஆற்றல் மிக்க இயற்கைப் பொருட்களைத் தெய்வமாகவும் போற்றி வணங்கினர் . நடுகல் வழிபாடு , மரம், மண், நீர், காற்று நெருப்பு என்று எல்லாவற்றையும் கடவுளாய் வழிபட்டனர்.

**'முந்நீர் மீமிசை பலர்தொழத்தோன்றி**

**எமுற விளங்கிய சுடரினும்" (நற். 283 அடி6-7)**

என்ற நற்றிணைப் பாடல் கடலின் மேல் பலரும் போற்றி வணங்குமாறு தோன்றி யாவரும் மகிழும்படி விளங்கி எழுந்த சுடரினும் என்று சு+ரியனைப் போற்றியுள்ளது.

'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரும்

**பலர்புகழ் ஞாயிறு (திருமுருகாற்றுப்படை 1-2)**

உலகில் உள்ள அனைவரும் புகழ்ந்து வணங்கும்படியாக உலகை வலமாகச் சுற்றி எழுந்த ஒளிவீசும் ஞாயிறு என்று திருமுருகாற்றுப்படை பாடியுள்ளது.

**சங்க இலக்கியங்களில் அறநெறி**

ஒரு தனிமனிதன் சமுதாயத்துடன் சேர்ந்து வாழ்வதற்கும் , தனியே நின்று தனிமனிதனாக இயங்குவதற்கும் பண்பு நலன்களை உருவாக்கித் தரும் குறிக்கோள்களும் , நோக்கங்களும் அறம் என்று வழங்கப்பட்டன.

**ஒழுக்க அறம்**

பண்டைத் தமிழர்கள் தனி மனித வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் பின்பற்றிய அறநெறிகளை சங்க இலக்கியங்கள் பாங்குற எடுத்துரைக்கின்றன . அகத்துறைப் பாடல்களில் களவும் கற்பும் அகவாழ்வுக்குரிய அறங்களை விளக்கி நிற்கின்றன.

**"அறஞ்சாரண் மூப்பே போல்" ( கலி. 28)**

என்ற கலித்தொகைப் பாடல் தர்மநெறியைப் பொருந்தாது மூப்பு எய்திய ஒருவன் நிலையைப் போல் தலைவி பொலிவு இழந்து காணப்பட்டாள் என்று தோழி கூறுவது போல அமைந்துள்ளது.

**நீதி அறம்**

சங்க இலக்கியப் புறப்பாடல்கள் அரசியல் அறங்களைத் தெளிவுப்படுத்துகின்றன.

**'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" ( புறம். 51)**

**'அறநெறி செங்கோல்" (சிலம்பு. 23;:58)**

**தொகுப்புரை**

அகத்திணையைக் குறிஞ்சி , முல்லை, மருதம், நெய்தல் பாலை என ஐந்தாகப் பிரிந்த நம் முன்னோர் பாலையை நடுவண் திணையாகக் கருதினர் . மக்கள் நானிலத்தில் வாழ்ந்தாலும் ஓரே மனப்பாங்கில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது . இவ்வாறு மக்கள் தமக்குள் கருத்து வேறுபாடினின்றி ஒருவர் கருத்தை மற்றவர்கள் ஏற்று வாழ்ந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

சங்கப் பாடல்கள் இயற்கையின் பின்னணிக்கேற்றவாறு உணர்ச்சிக் கூறுபாடுகளை வகுத்துக் கூறுகின்றன. தலைவன், தலைவி களவு வாழ்க்கையில் சோலைகள் . மலர் வனங்கள் , மரநிழல்கள் போன்ற இயற்கைப் பின்புலங்கள் அமைந்துள்ளன.

அரசர்கள் புலவர்களிடம் இரவலன் என்ற முறையில் அணுகாது உற்ற நண்பன் என்ற உறவுமுறையிலேயே பழகியமை புலனாகிறது.

ஞாயிற்றின் தன்மைகள், சிறப்புகள், ஆற்றல், அதன் வெம்மை, அது பற்றிய கொள்கைகள் சங்க இலக்கியத்துள் எண்ணற்றன பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்றும் சூரிய நமஸ்காரம் செய்யப்படுவதும், தமிழர் திருநாளில் பொங்கலிட்டுச் சூரியனுக்காகப் படைக்கும் சூரியப்பொங்கல் வழிபாடு செய்வதும் நம் முன்னோர்கள் விட்டுச்சென்ற பண்பாட்டு அடையாளங்கள் ஆகும்.

அறச்செயல்களைவிட நன்மை தருவது உலகில் வேறு ஒன்றும் இல்லை என்றும் , அதனை மறப்பது கேடுவிளைவிக்கும என்பதையும் நன்கு அறிந்துவைத்திருந்திருந்தனர் சங்க கால மக்கள் . சங்க கால மக்களின் வாழ்வில் சடங்குகளும் , வழிபாடுகளும் இன்றியமையாத இடத்தைப் பெற்றிருந்தன . நிலத்தை ஐவகைகளாக பாகுபடுத்தி ஒவ்வொரு நிலத்திற்கும் தெய்வங்களை வகுத்து வழிபட்டுள்ளனர்

**துணை நூற்பட்டியல்**

[1] ராமகிருஷ்ணன் "கிரியாவின் தற்கால தமிழ் அகராதி"சென்னை பதிப்பகம். பக்.1243, புதிய எண் 2,17 , பதிப்பு 1998

[2] பாலசுப்பிரமணியன் "நற்றிணை"நியு+ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு 2004.

[3] ப. பெரியசாமி "சங்க இலக்கியமும் இக்கல இலக்கியமும்"ஆய்வுக்கதிர், மெய்யப்பன் பதிப்பகம், பக்.37

[4] புறம். பா. எண்:131,181,192,195

[5] பொருநராற்றுப்படை அடி.74-78.

[6] நற்றிணை பா.எண்:283

[7] திருமுருகாற்றுப்படை 1-2

[8] கலித்தொகை பா. எண்:38

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*